2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2—10

9. அறிவிப்பு

கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) அலுவல்சாரா

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 13

உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து முறையாக வேட்பு மனு பெறப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுவின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) அவர்கள் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் (சிண்டிகேட்) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீண்டும் கூடும் நாள் குறிப்பிட்டு, பேரவையை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 25 (1)—ன்கீழ், பேரவையின் நிகழ்ச்சிகள் 3—2—2011 வரை ஒத்திவைக்கப்பெற்று பேரவை மீண்டும் 4—2—2011 அன்று (வெள்ளிக்கிழமை) கூடும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.